2003 ஏப்ரல் 28]

நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியில் 23 கடைகள் இருப்பதாக முன்பே நான் குறிப்பிட்டேன். அதேபோன்று இங்கே பல பகுதிகளிலே அதிகமான அட்டைகள் இருக்கின்றன என்றாலும், குறைவாக இருந்தாலும், அது மலைப்பகுதியாக இருக்கிறது, அந்த பகுதிகளுக்கு அந்தக் கடையைத் தரவேண்டுமென்று மலைவாழ் மக்களினுடைய சிறப்பை முன்னிட்டு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மலைப்பகுதிகளுக்கு இந்த நியாயவிலைக் கடைகளை பகுதி நேர கடைகளாக ஆக்குவதற்கு தகுதிகள் உண்டு என்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே உறுப்பினரவர்களுடைய பரிந்துரை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பட்டி மக்களுடைய ஆதங்கத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்ற அமைச்சருடைய விளக்கத்திற்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 346, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

346—

கால்நடை மருத்துவமனை

***10873—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், திருவம்பலாபுரம் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 12,600 என்று தெரிய வருவதால், புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதுபற்றி அரசு பரிசீலிக்கும்போது திருவம்பலாபுரம் கிராமத்திலும் புதிய கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவதுபற்றி கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவம்பலாபுரம், அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகள், ராதாபுரம் பகுதி ஆகியவை மழை மறைவுப் பிரதேசம். விவசாயமே முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. பெண்கள் பீடி சுற்றி குடும்பம் நடத்துகின்றார்கள் அல்லது ஆங்காங்கே கால்நடைகளை வளர்த்துத்தான் அவர்கள் குடும்பம் நடத்துகிறார்கள். திருவம்பலாபுரத்தைச் சுற்றியிருக்கின்ற மேலபார்க்கனேரி, கீழபார்க்கனேரி, சங்கனாபுரம், உலகாட்சகர்புரம், தோட்டாவிளை, திருவம்பலாபுரம், ஆத்தங்கரை பள்ளிவாசல், கூத்தங்குளி, இடிந்தகரை, மேலவிஜயாபதி, கீழவிஜயாபதி, அரசர் குளம், மொத்தங்குளம், காடுதுலா, தில்லைநகர், தில்லைவனம் தோப்பு, ஆவுடையாள்புரம், காமனேரி போன்ற கிராமங்கள் மிக வறண்ட பகுதி. அங்கே மக்களுடைய முக்கியத் தொழிலே விவசாயம், கால்நடைகள் வளர்ப்புதான். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்கும்போது பரிசீலிக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்ததற்கு நன்றி கூறி, அதற்கு முன்னால் அந்தக் கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்கும் வரை பகுதிநேர கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றிக் கேட்டிருந்தார்கள். கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைபபது என்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்த ஆண்டே பரிசீலித்து, ஆவனசெய்து, அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 28]

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பகுதி நேர கால்நடை மருத்துவமனையும், அதேபோன்று கால்நடை மருத்துவமனை தமிழகத்தில் அமைக்கும்போது இதற்கு முன்னுரிமையும் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தமைக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 347, திரு. க. பாரமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

347—

தொழிற் கூடங்கள்

***6487—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் சோமசுந்தரம் நூற்பாலையின் அருகில் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) தொழிற்கூடங்கள் பல வருடங்களாகச் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்கூடங்கள் இயங்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிற்பேட்டை அமைத்த பிறகு தொழில் முனைவோர் முன்வராத காரணத்தினால் அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், தொழிற்கூடங்கள் வாடகை/தவணைமுறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். அரசு நிறுவனங்கள் ஏதேனும் பயன்படுத்த முன்வந்தாலும் அவை ஒதுக்கித் தரப்படும்.